https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

16th JULY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 36



# கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை

## இறக்குமதி தடை நீக்கம் வாகனங்கள் தவிர

எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இருந்து வாகனங்கள் தவிர்ந்த அதிகமான பொருட்களுக்குமான இறக்குமதி தடை நீக்கப்படுகிறது.

ஜனாதிபதி காரியாலய பிரதானி சாகல ரத்நாயக்க,நிதி அமைச்சின் அதிகாரிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் ஒன்றிணைத்து கடந்த புதன் கிழமை இதுபற்றி கலந்தாலோசித்தனர்.அப்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.



இதன் அடிப்படையில் 286 பொருட்களுக்கான தடை நீக்கப்படுகிறது. மேலும் வாகனங்கள் உள்ளிட்ட 930 பொருட்களுக்கான தடை அப்படியே உள்ளது.


வாகன இறக்குமதிக்கான தடையை நீக்குவதுபற்றியும் அந்தக் கூட்டத்தில் பேசபப்ட்டது.தந்திரோபாய முறையில் அதற்கான தடையை நீக்குவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

## வெளிநாடுகளில் உள்ள கருப்பு பணத்தை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை

இலங்கையில் தவறான வழியில் சம்பாதித்து அல்லது திருடி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் இலங்கையர்களின் கருப்பு பணத்தை கைப்பற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அரசியல்வாதிகள்,அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோரால் தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்கள் வெளிநாடுகளில் இருக்கின்றன என்றும் அவற்றை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து அரச உடமையாக்குவதற்காக புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் வர்தகம்மூலம் சம்பாதிக்கப்பட்ட அதிகமான சொத்துக்கள் துபாய் உள்ளிட்ட நாடுகளில் உள்ளன என்றும் அவற்றை புதிய சட்டம் மூலம் இலங்கைக்கு கொண்டுவர முடியும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.




## எவரும் வரவில்லை

*பாரிய நஷ்டத்தில் இயங்கி வரும் சிறிலங்கன் எயார் லைன் நிறுவனத்தை தனியார்மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளபோதிலும் அதை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்று அறிய முடிகிறது.*

*இதன் 49 வீத பங்குகளை அரசு வைத்துக்கொண்டு 51 வீத பங்குகளை தனியார் நிறுவனத்திடம் வழங்கும் திட்டத்தில் அரசு உள்ளது.*

*ஆனால்,அதை வாங்குவதற்கு எந்தவொரு நிறுவனமும் முன்வரவில்லை.*






புதுசுடர்
www.puthusudar.lk
2023 JULY 16 - SUNDAY

# அதிகாரம் ஒன்றே இலக்கு

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்று மிக வேகமாக ஒரு வருடமாகிவிட்டது.இன்னும் எஞ்சி இருப்பது இன்னும் ஒரு வருடம்தான்.

அடுத்த வருடம் செப்டம்பர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.அந்தத் தேர்தலில் மக்கள் ஆணைமூலம் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்பதுதான் ரணிலின் இப்போதைய இலக்கு.

எஞ்சி இருப்பது ஒரு வருடம் என்றாலும் கண்ணை மூடித் திறப்பதற்குள் காலம் ஓடிவிடும்.இப்போது இருந்தே தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்–பிரசார பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதை ரணில் கச்சிதமாகச் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.ஆனால்,எல்லாம் நியாயமானமுறையில் இடம்பெறுகிறதா என்று பார்த்தால் அப்படி இல்லை.

மக்கள் இன்னும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி இருக்க அவர்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்ப்பதை விட்டுவிட்டு குறுக்கு வழியில் சென்று மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்கும் நடவடிக்கையில்தான் அரசு ஈடுபட்டு வருகிறது.

மக்களை கவருவதற்காக–அவர்களின் வாக்குகளை அள்ளுவதற்காகக் கொண்டுவரப்பட்டதுதான் அஸ்வெசும என்ற நிவாரணத் திட்டம்.அது இப்போது தலைகீழாக மாறியுள்ளது.

உண்மையான ஏழைகள் புறக்கணிக்கப்பட்டு வசதி படைத்தவர்களுக்கு உதவி வழங்கும் திட்டமாக அது மாறியுள்ளது.

இதனால் மக்கள் நாடுபூராகவும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இதை–இந்தப் போராட்டத்தை மிக சாதாரணமாகக் கருத முடியாது.அது ஆட்சியை கவிழ்க்கும் அளவுக்கு ஆபத்தாக அமையும்.எதிர்வருகின்ற தேர்தலில் அவர்கள் அரசுக்கு எதிராகவே நிற்பார்கள்.அவர்களின் வாக்கு பலமானது.

அதுபோக,இருக்கின்ற எம்பிக்களையும் வளைத்துப் போட்டு வாக்குகளை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

அந்த வகையில்,அமைச்சுப் பதவிகள் மறுக்கப்பட்டுள்ள எம்பிக்களின் குடும்பங்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்ளையும் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் திட்டம் ஒன்று ஜனாதிபதியிடம் உள்ளது.

அதேபோல்.செயலிழந்து போய் கிடக்கும் மாகாண சபைகளின் அதிகாரங்களை எம்பிக்களிடம் கொடுத்து அவர்களையும் கைக்குள் போடுவதற்குத திட்டமிட்டுள்ளார்.

மாகாண சபைகளின் அமைச்சுக்களின் அதிகாரங்களை அந்தந்த மாகாணங்களின் எம்பிக்களுக்கு பகிர்ந்து கொடுத்து அவர்களை வளைக்கப்போகிறார்.

மேலும்,கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை தேர்தலே இல்லாமல் மீண்டும் உறுப்பினர்களாக்குவதற்கான யோசனை ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வழிகளின் ஊடாக தனது வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஆனால்,யார் வாக்களித்தால் அவர் வெல்லுவாரோ அவர்களை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை.

எரிபொருள் வரிசையும் நீங்கி மின் வெட்டும் நின்றால் எல்லாப் பிரச்சினையும் சரி என்பதுபோல் ஜனாதிபதி நினைக்கிறார்.

மின்சாரம் இருப்பதைவிட அது வெட்டப்படுவதே மேல் என்பதுபோல் இருக்கிறது நிலைமை. ஏனென்றால்,அப்படி வருகிறது மின்கட்டணம்.

வருமானமே இல்லாத வீடுகளுக்கு 5 ஆயிரம்,10 ஆயிரம் என்று வருகிறது பில்.வாழ்நாளில் அனுபவிக்காத துன்பம் இது.

கோத்தாவின் ஆட்சியில் மின் துண்டிப்பு மாத்திரம்தான் இருந்தது.இப்படி மின் கட்டணம் அதிகரிக்கவில்லை.அரசு எல்லா பிரச்சினையும் தீர்ந்துகொண்டு வருவதாக எண்ணி ஒரு மாய உலகில் வாழ்ந்து வருகிறது.

அடிமட்ட மக்களின் நிலைமை மிக மோசம். நினைத்துப் பார்க்க முடியாத அளவு துன்பத்துகிறார்கள்.பொருட்கள் தாராளமாகக் கிடைக்கலாம் அதை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை.அந்தளவு விலை அதிகரிப்பு.

இப்படி மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்க ,அதை ஆராய்ந்து பார்க்காமல்–அதற்குத் தீர்வை முன்வைக்காமல் தேர்தலை மாத்திரம் குறிவைத்து காய் நகர்த்திக்கொண்டு வருகிறது அரசு.

# கல்முனை வலய பாடசாலை சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கம் பெறுவதற்கான கலந்துரையாடல்


(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கல்வி வலய பாடசாலைகளிலுள்ள சுற்றாடல் முன்னோடி கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி பதக்கத்திற்காக பூர்த்தி செய்யவேண்டிய சுற்றாடல் ஆராய்ச்சிகள், தலைப்புக்கள், அதற்கான ஆரம்ப வரைபுகள், முறைமையியல், பரிசோதனைகள், முடிவுகள், தரப் பகுப்பாய்வு, சுற்றாடல் ஆராய்ச்சி அறிக்கைகளை அறிக்கையிடும் முறைமைகள் பற்றி விரிவுரைகளும், கலந்துரையாடலும் இடம்பெற்றது.




தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பேராசிரியர் கலாநிதி ஏ.எம். றஸ்மி (புள்ளிவிபரவியல், கணித விஞ்ஞான பிரிவு), ஏ.எம். றியாஸ் அகமட் (சிரேஸ்ட விரிவுரையாளர், தலைவர், உயிரியல் விஞ்ஞான பிரிவு) ஆகியோரால் விரிவுரைகளும், கலந்துரையாடல்களும் நிகழ்த்தப்பட்டன.

தேசிய சுற்றாடல் அதிகார சபையின் நிகழ்ச்சித் திட்டத்திற்கான சுற்றாடல் அதிகாரி திருமதி பீ. செவ்வேள்குமரனின் ஒழுங்குபடுத்தலில், கல்முனை கல்வி வலய பணிப்பாளர், நிகழ்ச்சி திட்டத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் வழிகாட்டலில், நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் றாசிக் ஆதம்பாவா ஒருங்கிணைப்பில் ஐம்பதிற்கு மேற்பட்ட மாணவர்களும், பொறுப்பான பாடசாலை ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




## கெஹெலியவுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தரமற்ற மருந்து பொருட்கள் இறக்குமதி மற்றும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புகவெலவே பொறுப்பு எனத் தெரிவித்து அவருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவிக்கிறது.

தரமற்ற மருந்து பொருட்களின் இறக்குமதி காரணமாகவும் மருந்து பொருட்களின் தட்டுப்பாடு காரணமாகவும் நாட்டில் பல இடங்களில் மரணங்கள் நிகழ்ந்துள்ளன.இதனைத் தொடர்ந்தே நம்பிக்கை இல்லா பிரேரணை கொண்டுவரும் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.



## தேசிய கடன் மறுசீரமைப்பால் எமக்கு ஏற்படப்போவது என்ன?

## நீங்கள் ஆட்சியில் இருந்தால் இந்த பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

## இந்த நாடு சம்பாதிக்கும் பணம் எங்கே செல்கிறது ?

## மீண்டும் மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்தும் திட்டம் உங்களுக்கு உண்டா?

## உள்ளூராட்சி சபைத் தேர்தலைப்போல் ஜனாதிபதி தேர்தலும் ஒத்திப்போடப்படுமா?



# ஆட்சியைப் பிடிக்கும் வரை போராட்டம் தொடரும்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஜேவிபியின் முன்னாள் எம்பி சுனில் ஹந்துன்நெத்தி.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : தேசிய கடன் மறுசீரமைப்பால் எமக்கு ஏற்படப்போவது என்ன?**

பதில் : கடன் பொறியில் இருந்து நாம் களரவேண்டும் என்பதில் மாற்று கருத்து கிடையாது. ஆனால், அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நாட்டை பொருளாதாரரீதியாக அழித்தவர்களா?, மக்களா?

ஜப்பானை விடவும் முன்னேற்றகரமான நாடாக மாற்றும் வாய்ப்பு சுதந்திரத்துக்கு பின் எமக்கு கிடைத்தது.ஆனால்,எம் ஆட்சியாளர்கள் அதைச் செய்யவில்லை.ஊழல்,மோசடிகளை மாத்திரமே செய்தார்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பாதிக்கப்பட்ட நாடு அது.

அதேபோல், வியட்நாம். அதுவும் அமெரிக்காவுடன் சண்டை போட்டு அழிந்தது. வெகு சீக்கிரத்தில் எழுந்தது.

எம்மிடம் வளங்கள் இருந்தும் எம்மால் முன்னேற முடியவில்லை.கடன்களை மாத்திரம் வாங்கிக் குவித்தோம்.உற்பத்தி துறையில் பின்னோக்கிவிட்டோம்.

கடன்களை செலுத்த முடியாது என்று கூறி அந்தக் கடன்களை வெட்டிவிடுவதற்கு அரசு திட்டமிடுகிறது.இது யாருடைய பணம்?

உற்பத்தி துறை பூஜ்யத்தில் வீழ்ந்து கிடக்கிறது.அதைக் கட்டியெழுப்பாமல் கடன்களை வெட்டிவிடுவதற்கு பார்க்கிறது.

தேசிய கடன்களை மறுசீரமைப்பு செய்யுமாறு ஐஅக கூட சொல்லவில்லை.அப்படி சொன்னால்கூட செய்ய முடியாது.ஐஅக கூறும் எல்லா காரியங்களையும் செய்ய முடியாது.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசிடம் கேள்வி எழுப்பும் அதிகாரம் மக்களுக்கு உண்டு.மக்களின் கழுத்தை நெறிக்கும் வேலை இது என்பதால் இதை கேள்விக்கு உட்படுத்தும் அதிகாரம் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

மக்கள் இன்று மருந்துகள் இல்லாமல் மரணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகி ஒரு வருடமாகிறது.இந்த ஒரு வருடத்துக்குள் எத்தனை வியாபார நிலையங்கள்–தொழில்சாலைகள் மூடப்பட்டுள்ளன என்று பாருங்கள்.

அரசு விரும்பிய விரும்பிய நேரத்தில் விரும்பிய விரும்பிய விதத்தில் வரியை அதிகரிக்கிறது.

இன்று தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது.உலகம் முன்னேறியுள்ளது.இதன் நன்மைகள் இலங்கை மக்களுக்கு கிடைக்கவில்லை. முந்திய பரம்பரையை விட நாம் சொகுசாக வாழ வேண்டும் அல்லவா.

**கேள்வி : நீங்கள் ஆட்சியில் இருந்தால் இந்த பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?**

பதில் : நாம் ஆட்சியை கைப்பற்றினால் முதலில் செய்வது மக்களின் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவது.அது இந்த அரசு செய்யாத வேலை அது.

பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் பற்றி ஆய்வு செய்வோம்.பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

மலேசியாவில் பொருளாதாரப் பிரச்சினை வந்தபோது அந்நாட்டு பிரதமர் மஹ்திர் முஹம்மட் சொன்னார் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்னால் ஐஅக இடமும் செல்ல முடியும்.மக்களிடமும் செல்ல முடியும் என்று.

இறுதியில் அவர் மக்களிடமே சென்று பிரச்சினையைத் தீர்த்தார்.ஆனால்,எமது இந்த அரசால் மக்களிடம் செல்ல முடியாது.

நாம் மக்களிடம் சென்றே–உண்மையைக் கூறியே பிரச்சினையைத் தீர்ப்போம்.

வெளிநாட்டு முதலீட்டார்களை வரவைப்போம். ஆனால்,அவர்கள் முதலீடு செய்வதற்காக அவர்களிடம் லஞ்சம் வாங்கமாட்டோம்.

இன்று நடப்பது இதுதான்.வெளிநாட்டு முதலீட்டார்கள் சங்கிரிலா ,ஹில்டன் ஹோட்டல்களுக்கு பணப் பெட்டியுடன் சென்று அமைச்சின் செயலாளர்களை எதிர்பார்த்துக் கிடக்கின்றனர்.லஞ்சம் கொடுப்பதற்காக.

எமது ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்காது.

இலங்கையைப்போல் வரிகள் அதிகம் உள்ள நாடுகள் எங்கேயும் இல்லை.இலங்கையைப்போல் மது வரி அதிகம் உள்ள நாடுகளும் எங்கும் இல்லை.அதேபோல், இலங்கையைப்போல் மக்களால் வாழ முடியாத நாடுகளும் எங்கும் இல்லை.

மது வரியை வைத்தே நாட்டை முன்னேற்றலாம்.அந்தளவு அதிகமாக அரவிடப்படுகிறது.

வரிகள் அரவிடப்படாத நிலை எமது ஆட்சியில் இருக்காது.

**கேள்வி : அப்படியென்றால் நாம் சம்பாதிக்கும் பணம் எங்கே செல்கிறது ?**

பதில் : சுவீஸ் கணக்கு,லைபீரியா கணக்கு,பனாமா பேப்பர் என பல இடங்களில் அதைத் தேடவேண்டும்.கருப்பு பணத்தை கட்டாயம் கண்டுபிடிக்க முடியும்.எமது ஆட்சியில் அதைச் செய்வோம்.

ஜேவிபி ஆட்சிக்கு வந்தால் பொருளாதாரம் சுத்தமடையும்,ஊழல் ஒழியும்,கொள்ளை நிற்கும் என்று மக்களில் பலர் நினைக்கிறார்கள்.

மறுபுறம் இப்படியும் நினைக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தால் எனது வேலையை செய்துகொள்ள முடியாமல் போகும் என்றும் நினைக்கிறார்கள்.

திறந்த பொருளாதாரத்தைக் கொண்டுவந்து மக்களின் வாழ்வை திறந்துவிடவில்லை. மக்களின் வாழ்க்கை மூடப்பட்டுள்ளது இந்த திறந்த பொருளாதாரத்தால்.

வெளிநாடுகளில் திறந்த பொருளாதாரம்மூலம் மக்கள் நலமாக வாழ்கிறார்கள்.அங்கு நிலைமை வேறு.இங்கு எல்லோரும் நோயாளிகள்.சிறந்த மருந்துகள் இல்லை.பிள்ளைகளுக்கு நல்ல கல்வி இல்லை. மரணித்தால் அடக்கம் செய்வதற்கு இடமில்லை.

இதுதான் திறந்த பொருளாதாரமா?

தொழில்நுட்பம் வளர்ச்சியடையாத காலத்திலேயே நாம் ரஜைஉ என்ற பெயரில் ரேடியோ தயாரித்தோம்.இப்போது அதைக் காணவில்லை.இப்போது அல்லவா அந்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். திறந்த பொருளாதாரத்தின் தாக்கம்தான் இது.

மோசடி அரசியல் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் திட்டமிட்டு உள்ளூர் வர்த்தகத்தை அழித்துள்ளார்கள்.

அரசியல்வாதிகளே இன்று வர்த்தகம் செய்கிறார்கள். அதனால்தான் இந்த நிலை.

சிலர் நினைக்கிறார் கள் மின் வெட்டு இல்லாததால்,எரிபொருளுக்கான வரிசை இல்லாததால் பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிட்டது என்று நினைக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் பிரச்சினை தீரவில்லை.பிரச்சினை தீர்ந்தால் மக்கள் மூன்று வேளையும் சாப்பிட்டு நிம்மதியாக இருக்க வேண்டுமே.பொருட்களின் விலை உயர்வுபற்றிப் பேசக்கூடாதே.

இதனால் போராட்டம் முடியவில்லை. கோல்பேஸ் போராட்டம் வேண்டுமென்றால் முடித்திருக்கலாம். ஆனால், மக்கள் போராட்டம் இன்னும் தொடர்கிறது.

**கேள்வி : அப்படியென்றால் மீண்டும் மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்தும் திட்டம் உங்களுக்கு உண்டா?**

பதில் : ஆம்..மக்களின் பொருளாதார பிரச்சினை தீரவில்லை.அதிகாரம் உள்ள வர்க்கம் அதிகாரம் அற்ற வர்க்கத்தை நிர்வகித்துக்கொண்டு செல்கிறது.அவர்களை கஷ்டத்தில் தள்ளியுள்ளது.

அந்த மக்கள் வாழ்வதற்காகப் போராடுகிறார்கள்.அவர்களை நாம் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

அந்த மக்களின் பிரச்சினை தீர வேண்டுமென்றால் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்.அந்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக பல வழிகளில் நாம் போராடுகிறோம்.ஆட்சியப் பிடிக்கும்வரை போராட்டம் தொடரும்.

**கேள்வி : உள்ளூராட்சி சபைத் தேர்தலைப்போல் ஜனாதிபதி தேர்தலும் ஒத்திப்போடப்படுமா?**

பதில்: உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று தெரிந்ததும் அந்தத் தேர்தலை நடத்தாமல் பல காரணங்களைக் கூறி ஒத்திப்போட்டவர்தான் ரணில்.

ஜனாதிபதி தேர்தலில் தான் தோல்வியடைவார் என்று தெரிந்தால் அந்தத் தேர்தலைக்கூட ஒத்திப்போடுவதற்காக நரித் திட்டம் போடக்கூடிய ஒருவர்.

அவரது மாமா ஜே.ஆர்.சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியாவது தேர்தலை ஒத்திப்போட்டார்.ரணில் அதையும் நடத்தாமல் ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.

அதனால் நாம் தேர்தலைக் கேட்டு போராட வேண்டும்.அதற்காக நாம் ஒன்றிணைய வேண்டும் – என்றார்.

> வெளிநாட்டு முதலீட் டாளர்கள் சங்கிரிலா, ஹில்டன் ஹோட்டல் களுக்கு பணப் பெட்டியுடன் சென்று அமைச்சின் செயலாளர் களை எதிர் பார்த்துக் கிடக்கின் றனர். லஞ்சம் கொடுப்பத ற்காக. எமது ஆட்சியில் இப்படியெல் லாம் நடக்காது.




ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

முன்னோக்கிச் செல்கையில் ஒரு பங்கர்.

அதற்குள் சில முதியவர்கள்.

அவர்களைக் கடந்து செல்கிறார்கள் படையினர்.

அப்போது பின்னால் இருந்து வெடில்கள். படையினரை நோக்கி...

பின்னால் இருந்து எப்படி...? சாத்யமில்லையே...

திரும்பி பார்க்கிறார்கள் படையினர்.

என்ன ஆச்சரியம்...!!!

சுடுவது புலிகள் அல்ல.அந்த முதியவர்கள். அந்த பங்கருக்குள் கிடப்பவர்கள்.

படையினர் சுதாகரிப்பதற்குள் சரி.

படை வீரர் ஒருவர் பலி.சிலர் காயம்.

உடனே மடக்குகிறார்கள் முதியவர்களை. எதுவும் செய்யவில்லை.

விசாரிக்கிறார்கள்...

“நீங்கள் யார்..? நீங்களும் புலிகளா..??? இந்த வயதில்...“

இல்லை அவர்களுக்கு துப்பாக்கிகள் வழங்கியது புலிகள்.படையினரை சுடுமாறு கூறி...

உங்களை படையினர் அழித்துவிடுவார்கள். நீங்கள் அவர்களை சுட்டுத் தப்பிக்கொள்ளுங்கள்.

புலிகளின் உத்தரவு இது.வேறு வழியில்லை.சுடுகிறார்கள்.

அவர்களை எதுவும் செய்யவில்லை படையினர்.முதியவர்கள் என்பதால்...

அனுப்புகிறார்கள் பின்னால்...

முன்னேறுகிறார்கள் இப்போது...

நெடுகேயும் வாகனங்கள்.நூ ற்றுக்கணக்கில்...பற்றி எரிகின்றன.

நெருங்க..நெருங்க..தீ அதிகம்.

நகர்வது கஷ்டம் படையினருக்கு...

ஒருபுறம் மக்களின் வருகை.மறுபுறம் இந்தத் தீ பிழம்பு.

நிறுத்துகிறார்கள் சண்டையை. எடுக்கிறார்கள் மக்களை உள்ளே...

இருந்தும்,அங்கிருந்து வருகின்றன வெடில்கள்.புலிகளிடமிருந்து...

முடிந்துவிட்டது மக்களின் வருகை.

இப்போது தொடர்கிறது சண்டை.

நகர்கிறார்கள் அடித்துக்கொண்டு...

இப்போது புலிகள் எல்லோரும் நந்திக்கடலுக்குள்.அந்த வாவிக்குள்.

கடலுக்கும் வாவிக்கும் இடையில் உள்ள சிறு நிலப்பரப்பில்...

பெரும் எண்ணிக்கையில் அவர்கள்.500 பேர் வரை...

எஞ்சியது அவ்வளவுதான்...

எஞ்சிய தளபதிகளும் அங்கேதான்...

சூசை-பொட்டு அம்மான்-சார்ஸ் அன்டனி-இப்படி பலர்.

கூடவே புலிகளின் தலைவர் பிரபாகரனும்...

கடும் பாதுகாப்பு.தரையில்...கடலில்... வானில்...

தரையில் வாவிக்கு முன்பாக 3 பாதுகாப்பது லைன்கள்.

ஒவ்வொரு லைனிலும் ஏகப்பட்ட பங்கர்கள்.

புலிகள் ஒன்றை உடைத்துக்கொண்டு வந்தால் இரண்டாவது லைனில் சிக்குவார்கள்.

சிலவேளை அதனையும் உடைத்தால் மூன்றாவது லைனில் சிக்குவார்கள்.

மூன்றாவது லைனுக்கு அப்பால் reserve இல் படையினர்.

முன்னால் 3 லைன்களாலும் சமாளிக்க முடியாமல் அவர்கள் இறங்குவர்.

ஆகவே...தரையால் தப்புவது என்பது முடியாத காரியம்.

அப்போ கடல் வழியால்...?

அதற்கும் வாய்ப்பில்லை.

அந்த வழியும் லொக்.மார்ச் மாதத்தில் இருந்து...

தீவிர ரோந்து நடவடிக்கையில் கடற்படையினர்-அவர்களது டோரா படகுகள்.

அதுபோக..கரையோரத்தில் இராணுவம். ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே...

எல்லாவற்றையும் கண்காணித்தவாறு போர் விமானங்கள்.

வட்டமிடுகின்றன தினமும்...

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக ரேடார் கருவிகள்.

கண்காணிக்கின்றன நந்திக்கடல் வாவியை .24 மணிநேரமும்...

வித்தியாசமான பொருட்கள் தென்பட்டால் மஞ்சள் நிறத்தில் காட்சி தரும் அவை.

படகுகள்..ஆட்கள் தென்பட்டால்...

இருந்தாலும்,இவற்றையெல்லாம் தாண்டி-முறியடித்து பிரபாவைக் காப்பாற்றுவதுதான் புலிகளின் திட்டம்.

அந்தத் திட்டத்துக்கு-பிரபாவை காப்பாற்றும் இறுதிச் சமருக்கு தலைமை சார்ள்ஸ் அன்டனி. பிரபாவின் மகன்.

படகுகள்-தற்கொலை புலிகள்-கடற்புலிகள்-எல்லாம் தயார்.

எப்படித் தாக்கப் போகிறார்கள்...? புலிகளின் வியூகம் என்ன...?

பெரும் எடுப்பில் நகர்த்தல்.பங்கர்களை கைப்பற்றி வழி ஒன்றை ஏற்படுத்துதல்.

அதனூடாக பிரபாவை அழைத்துச் செலுத்தல்.முல்லைத்தீவு காட்டுக்குள்.

இரண்டாக பிரிகிறார்கள் புலிகள்.

ஒரு குழு சார்ள்ஸ/டன்.தாக்குதலுக்காக...

அடுத்த குழு பிரபாவுடன்.வாவிக்குள்.

காத்துக்கொண்டிருக்கிறார் புலிகள். பாய்வதற்கு...

...சந்திப்போம் தொடர் -10 இல்...

# நந்திக்கடல் வாவிக்குள் பாய்ந்த பிரபாகரன்: தளபதிகள்-கரும்புலிகள் எல்லோரும் அவரை சுற்றி...



அதுதான் இங்கு முக்கியமானது.

கரும் புலிகள்-கடற்புலிகள்-நன்கு பயிற்சி பெற்ற புலிகள்.என பல பலமான புலிகள் அங்கு.

எல்லோரும் இப்போது பிரபாவின் பாதுகாப்புக்காக...

இப்போது புலிகளின் இலக்கு பிரபாவைக் காப்பாற்றுவதுதான்...எப்படியாவது கைப்பற்றியாக வேண்டும்.

அவரால் தப்ப முடியுமா?

அவரிடம் இப்போது இருப்பது இரண்டே இரண்டு தெரிவுகள்தான்...

ஒன்று படையினரின் பாதுகாப்பை உடைத்துக்கொண்டு முல்லைத்தீவு காட்டில் ஏறுதல்...

அடுத்தது இறுதிவரை போராடி மடிதல்...

இதில் இரண்டாவதுதான் சாத்தியம்.

முதலாவதுக்கு வாய்ப்பே இல்லை.

**படகுகள்-தற்கொலை புலிகள்-கடற்புலிகள்-எல்லாம் தயார். எப்படித் தாக்கப் போகிறார்கள்...? புலிகளின் வியூகம் என்ன...? பெரும் எடுப்பில் நகர்த்தல். பங்கர்களை கைப்பற்றி வழி ஒன்றை ஏற்படுத்துதல். அதனூடாக பிரபாவை அழைத்துச் செலுத்தல். முல்லைத்தீவு காட்டுக்குள். இரண்டாக பிரிகிறார்கள் புலிகள். ஒரு குழு சார்ள்ஸ் டன். தாக்குதலுக்காக... அடுத்த குழு பிரபாவுடன்.வாவிக்குள்.**



# அமெரிக்க தூதுவரின் டெலிபோன் ஒப்பரேட்டராக ரணில்..!!!

ஜனாதிபதி இந்த முறை நுவரெலியாவுக்குச் சென்றது அமெரிக்க தூதுவர் உள்ளிட்ட 40 பேருடன்.

அவர்கள் நானுஓயாவரைச் சென்றது ரயிலில்.நுவரெலியா ஜனாதிபதி மாளிகையை அடைந்ததும் அங்கு இருந்த பழைய தொலைபேசிகளை பார்த்து வியந்து போனார் அமெரிக்க தூதுவர் ஜுலி சங்.

இவற்றுக்கு எத்தனை வயது என்று ஜனாதிபதியிடம் கேட்டார் ஜுலி.

150 வருடங்கள் என்றார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

அதுமட்டுமல்ல சிறிது நேரம் தூதுவருக்காக அந்த டெலிபோன்களை இயக்கி காண்பித்தார் ரணில்.ஒப்பரேட்டராக மாறி..






# ஏன் இந்த தயக்கம்?

புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதியால் இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியாமல் உள்ளது.

மொட்டு கட்சி உறுப்பினர்கள் விரும்புவது சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும் என்று.

பொலிஸ் அமைச்சர் டிரான் அலசின் விருப்பமும் அதுதான்.

ஆனால்,ஜனாதிபதியின் நெருக்கமானவர்களின் விருப்பம் அதுவல்ல.இன்னும் சில காலம் சந்தன விக்ரமரத்னவைவே பொலிஸ்மா அதிபராக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

அந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் இப்போது ஜனாதிபதி சந்தன விக்ரம ரத்னவுக்கு பதவி நீடிப்பை வழங்கியுள்ளார்.

இதற்கு எதிராக ஜனாதிபதி காரியாலய உயர் அதிகாரி ஒருவர் எம்பி ஒருவருடன் சேர்ந்துகொண்டு தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் வேலைத் திட்டத்தில்



# தூதுவரே பாடுங்கள்..!!!

ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் போய் அமர்ந்தது பியானோ இசைக் கருவிக்கு அருகில்.


தன்னால் பியானோ வாசிக்க முடியும் என்று அவர் ஜனாதிபதியிடம் கூறினார்.

“அப்படியா...நல்லது.நீங்கள் வாசியுங்கள் ஜுலி பாடட்டும்.. என்று கூறினார் ஜனாதிபதி

அமெரிக்க தூதுவர் ஜுலியோ அதற்கு மறுத்துவிட்டார்.

மறுநாள் அவர்கள் ரயிலில் எல்லவிற்குச் சென்றனர்.

அவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தே அந்தப் பயணத்தை மேற் கொண்டனர்.



# ரணிலின் ஹெலியை தடுத்த பனிக் கூட்டம்

மறுநாள் ஹம்பாந்தோட்டைக்கு செல்வதற்கு தயாரானார் ஜனாதிபதி.கூடவே பிரமலால் தொலவத்த எம்பியும்.பயணம் ஹெலிகொப்டரில்.


அப்போது பனி மூட்டம் கடுமையாக இருந்ததால் ஹெலி பயணிப்பது கஷ்டமாக இருந்தது.

விமானி சில நிமிடங்கள் காத்திருந்தே பயணத்தை ஆரம்பித்தார்.அப்போதும் அப்படித்தான்.

இதனால் விமானி க்ரகேறி வாவிக்கு மேலாக 20 அடி உயரத்தில் ஹெலியை உயர்த்தி அதே அளவில் 600 மீற்றர் தூரம்வரை செலுத்தினார்.

பின்னர் சிறிது உயரத்தைக் கூட்டினார்.

இப்படி கட்டங்கட்டமாகத்தான் உயரத்தைக் கூட்டி ஹம்பாந்தோட்டைக்கு கொண்டு போய்ச் சேர்த்தார் ஜனாதிபதியை.



# சிறை சென்றால் சுசில் வீரர்

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் கூடியது.

அப்போது ஆசியர்கள் நியமனத்துக்கு நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவுப்பற்றி பேசப்பட்டது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார் ஆசிரியர்கள் தட்டுப்பாட்டால் பாடசாலைகள் மூடப்படுகின்றன.பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது.இதுபற்றி நான் நாடாளுமன்றில் பேச வேண்டும் என்று.

அதற்கு ஜனாதிபதி ““நீங்கள் ஆசிரியர் நியமனத்தை வழங்குங்கள்.இதனால் நீங்கள் சிறை சென்றால் வரலாற்றில் வீரராகப் பதியப்படுவீர்கள் ““.என்றார் கிண்டலாக..



# ராஜபக்ச குடும்பம் அனைவரும் ஒரே இடத்தில்...

ராஜபக்ஸ குடும்பத்தவர்கள் அனைவரையும் மிக நீண்ட காலத்துக்கு பின் ஒரே இடத்தில் ஒன்றாகக் காணும் வாய்ப்பு பலருக்கு கிடைத்தது.

அது கடந்த வாரம் கொழுப்பில் இடப்பெற்ற இராஜாங்க அமைச்சர் டி.பி. சாணக்கவின் திருமணத்தில்.

கோத்தாபய ராஜபக்சவால் அந்தக் குடும்பம் பிளவுபட்டுக் கிடக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி, அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்கள்,எம்பிக்கள் என எல்லோரும் அந்தத் திருமணத்தில் கலந்துகொண்டனர்.

அதில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனியாக போய் ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

இதைக் கண்ட இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவரைத் தேடித் சென்று அவருடன் சிறிது நேரம் பேசிவிட்டு வந்தார்.

நாமல் ராஜபக்ச அவரது மனைவி -பிள்ளையுடன் நுழைந்தார்.அவரது மனைவி கர்ப்பிணியாக இருப்பதைக் கண்டவர்கள் அவருக்கு சுக பிரசவம் ஏற்பட வேண்டும் என்று வாழ்த்துத் தெரிவித்தனர்.

அது இரண்டாவது குழந்தைக்கான கர்ப்பம்.



# மேடை நாடகம் பார்க்க சென்ற அமைச்சர்கள்

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் இடம்பெற்றுக்கொண்டிருந்த அன்றைய தினம் இராஜாங்க அமைச்சர்கள் பிரமித்த பண்டார தென்னகோன் மற்றும் பியல் நிசாந்த ஆகிய இருவரும் யாருக்கும் தெரியாமல் மேடை நாடகம் பார்க்கச் சென்றனர்.

அவர்கள் இருவரும் மேடை நாடகப் பிரியர்கள்.

அவ்வாறு பார்த்து முடிந்ததும் மறக்காமல் நாடாளுமன்றத்துக்குச் சென்று வாக்கெடுப்பில் கலந்துகொண்டனர்.


ஒருவேளை, இந்த நாடகத்தால் வாக்கடுப்பை மிஸ் பண்ணி இருந்தால் அவ்வளவுதான்.ஜனாதிபதியிடம் வாங்கி கட்டி இருப்பார்கள் என்றார்கள் இந்தத் தகவல் தெரிந்த மொட்டு எம்பிக்கள் சிலர்.

**தொடர் - 03**



- சின்னத்தம்பி குருபரன் -









# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்

**-ஒரு வரலாற்றுப் பார்வை-**

சிங்களத் தலைமைகள் காரியம் முடிந்தவுடன் கைகழுவி விடுகின்றவர்களாகவே 1919 முதல் இன்றுவரைக்கும் செயற்பட்டடார்கள், செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிதர்சன உண்மையை உணர்ந்தும் உணரத்தவறிய, தீர்க்க தரிசனம் குறைந்தவர்களாகவே தமிழ் தலைவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்ற உண்மையும் ஒருபுறம் வெளிப்படுத்தப்படுகின்றன.

இதற்குப் பல சான்றுகளை முன்வைக்கலாம்.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் இருந்தே நீண்டகாலமாக மலையகச் சிங்களத் தலைவர்களுக்கும் கரையோரச் சிங்களத் தலைவர்களுக்கும் இடையில் முறுகல்நிலை இருந்து வந்தன.

1920 ஆம் அண்டு மானிங் அரசியல் யாப்புச் சீரதிருத்தம் செய்வதற்குரிய ஆலோசனைகளையும் சிபார்சுகளையும் முன்வைக்குமாறு ஆளுனர் மானிங் இலங்கை தேசிய காங்கிரஸிடம் கேட்டிருந்தார் ஆளுனர்.

மலையகச் சிங்களத் தலைவர்கள் இலங்கையை மலையகம், கரையோரம், வடக்கு- கிழக்கு என மூன்று அலகுகளாகப் பிரித்து ஆட்சி அதிகாரத்தினை வழங்குமாறு கோரியிருந்தனர்.

அதனைக் கரையோரச் சிங்களவரும் ஆமோதித்தனர். தமிழ் தலைவர்கள் ஒரே இலங்கையின் கீழ் பிரிவினையின்றி ஒன்றாகச் செயற்படுவோம் எனக் கூறி நிராகரித்தனர்.

இதன்விளைவு 1920 ஆம் ஆண்டு மானிங் யாப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக நடைபெற்ற தேர்தலில் 14 ஆசனங்களைச் சிங்களத் தலைவர்களும் 04 ஆசனங்களை மாத்திரம் தமிழர்கள் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கி இருந்தன.

1920 இல் தமிழ், சிங்களத் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 1921 ஆம் ஆண்டு தமிழ் தலைவர்கள் இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகி 1921-08-15ஆந் திகதி இலங்கை தமிழர் மகாசபையைத் தோற்றுவித்தனர்.

1924 ஆம் ஆண்டு மானிங் டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தத்திற்காகத் தமது கொரிக்கைகளைத் தனித்தனியாக முன்வைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தனியாகச் சிபாரசுகளை முன்வைப்பதற்கான வாய்ப்பு இருந்திருந்தும் தூரநோக்கோடு செயற்படாததனால் வாய்பபை இழக்க வேண்டிய சூழ்நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது.

1924 மானிங் டிவன்சயர் யாப்புச் சீர்திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகத் தமது தரப்பு நியாயங்களை முன்வைத்துத் தேசிய இயக்கங்களின் தலைவர்கள் யாப்புச் சீர்திருத்தம் வேண்டி கோரிக்கைகளை நியாயப்படுத்திப் பத்திரிகைகள், பொதுக் கூட்டங்கள், போராட்டங்கள் ஊடாக முன்னெடுத்தனர்.

இதனைக் கருத்தில் கொண்ட பிரித்தானிய அரசு யாப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆளுனர் ஹர்பட் ஸ்டான்லி (1927 - 1931) இன் காலத்தில் 1929 ஆம் ஆண்டு டொனமூர் பிரபுவின் தலைமையில் நான்கு பேர் கொண்ட “ டொனமூர் ஆணைக்குழு“ இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவர்கள் சகல தலைவர்களையும் கட்சிகளையும் இயக்கங்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் சந்தித்துக் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டனர்.

1929 ஆம் ஆண்டு மலையகத் தலைவர்களான ஏ.எவ். மொலமூரே, ரீ.பீ.கொப்பேகடுவ, ஜீ.பீ.ரத்னாயக்க ஆகியோர் மலையகம் உட்பட இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து அவற்றுக்கு சுயெச்சை அதிகாரமுடைய சமஸ்டி ஆட்சி முறை ஒன்றைக் கோரினர்.

அதற்கு ஏனைய மாகாணங்களில் உள்ளோர்கள் ஆதரவு வழங்கிய போதிலும் தமிழ் தலைவர்கள் இக்கோரிக்கைக்கு ஆதரவு வழங்க மறுத்தனர். இதற்குப் பதிலாக சட்டவாக்கக் கழகத்தில் “ஓர் இனக்குழுவினர் இன்னோர் இனக்குழுவினரை மிகைத்துச் செல்லாதவகையில் பிரதிநிதித்துவம் அமைதல் வேண்டும்“ என ஏன் கூறினார்களோ தெரியவில்லை.

இந்த வாய்ப்புக்கள் அனைத்தையும் நழுவ விடுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் கொழும்பை வாழ்விடமாகக் கொண்ட சேர.பொன்.இராமநாதன் போன்ற தமிழ் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1920 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களினால் சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டிருந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட பிரித்தானிய அரசு சோல்பரி யாப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக சிறுபான்மையினருக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க 1945 ஆம் ஆண்டு அரசுக் கழகத்தில் விவாதமொன்று நடைபெற்றது. அதற்குச் சோல்பரிப் பிரபு உட்பட பிரிட்டிஷ் மகாராணியாரும் கலந்து கொண்டிருந்தார்.

அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவியான மகாராணியார் சட்டசபையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் விவாதங்களையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சட்ட வல்லுனர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டு 72 மணித்தியாலம் சட்டசபையில் விவாதம் செய்தார எனப் பெருமைப்பட்டுப் பலரும் கூறுவர். அவ்விவாதம் நீண்டுகொண்டே போனது.

சிங்களத் தலைவர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கேட்காமல் இன விகிதாசார அடிப்படையில் கோரக்கையை முன் வைக்குமாறு கூறினர்.

ஏனெனில் சிங்களவர் இலங்கையின் பெரும்பானமைச் சமூகம் என்றவகையில் தமிழர் தரப்பினர் 35 அல்லது 40 வீதம் கேட்டிருக்கலாம்.

அது நியாயமானதாகவும் இருந்திருக்கும். அதனை விடுத்து 50 க்கு 50 கேட்டது நியாயமான ஒன்றாகப்படவில்லை.

இவ்வாறுதான் தமிழ் தலைவர்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் இருந்து இன்றுவரை பல தடவைகள் செயற்பட்டு வந்திருக்கின்றனர்.

நிறைவேற்றப்படமுடியாத தீர்வுத்திட்டத்திலும் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படாத பேச்சு வார்த்தைகளிலுமே பெரும்பாலும் நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றனர்.

இச்செயற்பாடுகள் அரசினாலும், தமிழ் தலைமைகளாலும் நீண்டு கொண்டு போனதே தவிர சிறுபான்மையினரின் நியாயமான பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒனறாக அமையவில்லை.

இந்த 50 க்கு 50 கோரிக்கையே கடந்த 75 ஆண்டுகளாக பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை ஒருக்கிச் செயற்படுவதற்கும் காரணமாக அமைந்தது.

தவிரவும் சிங்களத் தலைவர்களும் சிங்களக் கடும்போக்கு வாதிகளும் சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஈடுபாடு, அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வராமையும் காரணமாக அமைந்தன.

சட்ட வல்லுனர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்து வாதிட்டுக் கொண்டிருந்தபோது தந்தை எஸ்.ஜே.வீ.செல்வநாயகம் அவர்கள் இது நியாயமற்ற கோரிக்கை இதிலிருந்து பின்வாங்குவோம் எனக்கூறி நிராகரித்தார்.

தந்தை செல்வாவாவது முன்பு கூறியதுபோல் 35 அல்லது 40 வீதம் கேட்பதற்கு முன்வரவில்லை. இதனை முஸ்லிம் தலைவர்களும் மலையகத் தமிழ் தலைவர்களும் கவனத்தில் கொள்ளவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியில் சிறுபான்மையினருக்குக் கிடைக்க இருந்த அரிய வாய்ப்பொன்று கைநழுவிவிட்டதாகக் கூறிய மகாராணியார் சிறுபான்மையினரை பாதுகாக்கும் வகையில் புதிய யாப்பில் சில விடயங்களை உள்ளடக்குகின்றோம் எனக் கூறியதற்கு இணங்க சோல்பரி அரசியல் யாப்பில் 29 வது சரத்தின் பு.டீ.ஊ பிரிவுகள் உள்ளடக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் 23-06-1947 இல் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்திலான சுதந்திரம் வழங்குவதாகப் பிரித்தானிய அரசு அறிவித்தது.

தொடரும்...



# யாழில் இடம்பெற்ற பிரம்மாண்ட இசை-நகைச்சுவை நிகழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் ஏநடளநவ அனுசரணையுடன் அண்மையில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற பிரம்மாண்ட இசை மற்றும் நகைச்சுவை நிகழ்ச்சியான 'வணக்கம் Jaffna' வெற்றிகரமாக நடைபெற்றிருந்தது.

விஜய் டிவி சூப்பர் சிங்கர் பிரபலங்களான மானசி, ரீதர் சேனா, மூக்குத்தி முருகன், ஹரிப்பிரியா, சாம் விசால் உள்ளிட்டோர் பங்குபற்றிய இந்நிகழ்வில், கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியின் நகைச்சுவை புகழ் குரேஷி மற்றும் நவீன் உள்ளிட்டோரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் சூப்பர் சிங்கர் பாடகர்கள் தங்களது இனிமையான குரலால் இரசிகர்களை வசீகரித்ததோடு, அவர்களை நடனமாடவும் வைத்தனர். நிகழ்ச்சியை நகைச்சுவை குறையாது விஜய் டிவி பிரபலமான குரேஷி தொகுத்து வழங்கியிருந்ததோடு, வயிறு குலுங்க சிரிக்கவும் வைத்தார்.

மிமிக்ரிக்கு புகழ் பெற்ற விஜய் டிவி நவீன், பல்வேறு குரல்களில் பேசியதோடு, பார்வையாளர்களுக்கு மத்தியில் பிரபலங்களை மேடைக்கே கொண்டு வந்தது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தார்.

இலங்கையில் அழகுக்கலை துறையில் முன்னணியில் உள்ள வர்த்தகநாமமான ஏநடளநவ, உயிர்ப்பான மென்மையான (Soft) சருமத்தை விரும்புவோருக்கான ஒரு உன்னத தெரிவாக விளங்குகின்றது.

அத்துடன், 2023 LMD சஞ்சிகையின் தரப்படுத்தலுக்கமைய, தனிநபர் பராமரிப்பு சவர்க்கார பிரிவின் கீழ் Velvet சவர்க்காரம் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின் கட்டணத் திருத்தம் வரவேற்பு

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

வர்த்தக சுடர்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் ¶ருஊளுடு ஜுலை – டிசம்பர் காலப்பகுதிக்கான மின்சாரக் கட்டணத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களை கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (துயுயுகு) வரவேற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணத் திருத்தங்கள் தொழிற்துறை சமர்ப்பிப்புகள் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாமல், நெரிசல் இல்லாத (முகக-ிநயம) நேரங்களில் தொழிற்துறை மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இதனால் செயற்பாட்டுச் செலவுகள் முக்கியமாக அதிகரித்ததால், நெரிசல் இல்லாத (முகக-ிநயம) நேரங்களில் வேலையின்மை பிரச்சினைக்கான அவதானம் காணப்பட்டது. மேலும் இந்த காலகட்டத்தில் ஆடைத் தொழிலின் போட்டி மற்றும் ஒட்டுமொத்த நிலைத்தன்மைக்கும் பிரச்சினையாக அமைந்தது.

2022 இல், முகக-ிநயம விகிதம் ரூபா 6.58ஃ மறுா இலிருந்து ரூபா 15ஃ மறுா ஆக அதிகரித்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், முகக-ிநயம ரூபா 15 இலிருந்து ரூபா 34ஃ மறுா இன் கணிசமான அதிகரிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது,.

இதன் விளைவாக வெறும் 12 மாதங்களில் 400மு மின் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்பட்டன. கடந்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ¶ருஊளுடு துயுயுகு இனால் முன்னிலைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இலங்கையானது பிராந்தியத்தில் அதிக தொழிற்துறைக் கட்டண விகிதங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

இது பிராந்தியத்தில் தொழில்துறையின் போட்டித்தன்மைக்கும், நாட்டின் பொருளாதாரம் அந்நிய செலாவணிக்கான அதிக தேவைப்பாடும் இந்த நேரத்தில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் திறனுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.
எனவே, முகக-ிநயம நேரங்களில் தொழில்துறை மின்சாரக் கட்டணம் உட்பட தொழில்துறை கட்டணத்தை 29ஃ மறுா ஆகக் குறைப்பதற்கான மின்சார ஒழுங்குமுறையாளர்களின் இந்த முடிவை தொழில்துறை பெரிதும் பாராட்டுகிறது.



# கதிர்காமம் கிரி வெஹெர-ருஹூணு மகா கதிர்காம தேவாலயத்தை ஒளியேற்றிய சுதேசி கொஹொம்ப

இலங்கையின் இரண்டு முக்கிய வழிபாட்டுத் தலங்களான கதிர்காமம் கிரி வெஹெர மற்றும் ரு/ஹுணு மகா கதிர்காம தேவாலயத்தின் 2023 எசல திருவிழாக்களுக்கு, முன்னணி மூலிகைகள் கொண்ட தனிநபர் பராமரிப்பு பொருட்கள் உற்பத்தியாளர்களான ளுறயனநளாை ஐனெரளவசயைட நுழசமளீடுஊ நிறுவனத்தினால் ஒளியேற்றப்பட்டன.

"சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா சத்காரய" எனும் கருப்பொருளின் கீழ் இந்த ஒளியூட்டும் நிகழ்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வுகள் 2023 ஜுன் 19ஆம் திகதி ஆரம்பமாகி ஜுலை 04ஆம் திகதி நிறைவடைந்தன. அத்துடன் சுதேசி நிறுவனம் தொடர்ச்சியாக 22ஆவது வருடமாக இந்த 'ஆலோக பூஜா' நிகழ்வுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில், இவ்வாறான வருடாந்த 'ஆலோக பூஜா' போன்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை பாதுகாப்பதை கடமையாக கருதுவதாக, சுதேசி நிறுவனத்தின் தலைவி அமரி விஜேவர்தன தெரிவித்தார்.



# சுவரொட்டி ஓவியப் போட்டி

"எனது பூமிக்கு நல்லதை செய்கிறேன் – ஒரு ஓவிய வெளிப்பாடு" (Doing good for the planet - an artistic representation) என்ற தலைப்பில் நெஸ்லே லங்காவின் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான சுவரொட்டி ஓவியப் போட்டியின் உச்சக்கட்டமாக கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளின் வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

பாடசாலைக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடும் வகையில் இரண்டு மாதங்கள் நீண்டதாக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

வலயம், மாகாணம் மற்றும் அகில இலங்கை என மூன்று சுற்றுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டி, நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களிடமிருந்து 60,000 நுழைவுகளை ஈர்த்தது.

"இலங்கையில் பிளாஸ்திக் மாசுபாட்டை நிவர்த்தி செய்வதில் எமது உறுதியான அர்ப்பணிப்புடன், எமது பிளாஸ்திக் பொதியிடலை மீள்சுழற்சி செய்யக்கூடிய அல்லது மீளவும் பயன்படுத்தக்கூடியதாக மாற்றுவதற்கும், கழிவுகளை தரம்பிரித்து சேகரிப்பதை வலுப்படுத்துவதற்கும், நேர்மறையான நடத்தை மாற்றத்தை தூண்டுவதற்கும் நாங்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று நெஸ்லே லங்கா தெரிவித்துள்ளது.

# அமானா வங்கி புதிய சந்தைகளுக்கு விரிவாக்கம்



நாடு முழுவதிலும் தனது சேவை வலையமைப்பை விரிவாக்கம் செய்வதையிட்டு அமானா வங்கி பெருமை கொள்கின்றது. அதன் பிரகாரம் தற்போது 55 பிரதேசங்களில் தனது வங்கிச் சேவைகளை வழங்கி வருகின்றது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லில், 33 முழுமையாக இயங்கும் வங்கிக் கிளைகள் மற்றும் 22 சுய வங்கிச் சேவை நிலையங்கள் போன்றன அடங்கியுள்ளன.

பரந்தளவு வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான மற்றும் இலகுவில் அணுகக்கூடிய சேவைகளை பெற்றுக் கொடுக்கும் அர்ப்பணிப்புக்கமைய இவை அமைந்துள்ளன.

கல்ஹின்ன மற்றும் மடவல ஆகிய பகுதிகளில் அண்மையில் நிறுவப்பட்ட சுய வங்கிச் சேவை நிலையங்கள், அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர், பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், உப தலைவர் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு சித்தீக் அக்பர், பிரதேசத்தின் வியாபார பிரமுகர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் பங்கேற்புடன் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தன.

இல. 226ஃ3, பள்ளிவாசல் வீதி, கல்ஹின்ன எனும் முகவரியில் அமைந்துள்ள கல்ஹின்ன சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக 24ஃ7 நேரமும் பண மீளப் பெறுகைகள், பண வைப்புகள் மற்றும் காசோலை வைப்புகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதுடன், அங்கு காணப்படும் வாடிக்கையாளர் சேவை அதிகாரிகளினூடாக இதர வங்கிச் சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறான சேவைகளை, இல. 227ஃ2ஃ2 கண்டி வீதி, மடவல எனும் முகவரியில் உள்ள சுய வங்கிச் சேவை நிலையத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறந்த சேவையை உறுதி செய்யும் வகையில், மடவல மற்றும் கல்ஹின்ன சுய வங்கிச் சேவை நிலையங்களின் நிர்வாகச் செயற்பாடுகள் உயர் திறன் படைத்த மற்றும் வாடிக்கையாளர்களில் அக்கறை கொண்ட அமானா வங்கியின் அக்குரணை மற்றும் கட்டுகஸ்தோட்ட கிளைகளின் அணியினால் முன்னெடுக்கப்படும். இரு சுய வங்கிச் சேவை நிலையங்களும் யுஐ ளுநஉரசவையள ¶(வு) டுவன. உடன் இணைந்து டீசழறெ டுயடிநட ளுநசஎiஉந ஆழனநட எனும் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன.

வலையமைப்பு விரிவாக்கம் குறித்து வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "எமது சுய வங்கிச் சேவை நிலையங்களை விரிவாக்கம் செய்வதையிட்டும், 55 அமைவிடங்களை சென்றடைந்துள்ளதையிட்டும் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.என்றார்.



# அலியான்ஸ் லங்கா நிறுவனத்தின் சுத்தமான குடிநீர் வழங்கல்

அலியான்ஸ் லங்கா குருவிட்ட இரத்தினபுரிஃஹிக்கஸ்வத்த ஆரம்ப பாடசாலையில் அதிநவீன குடிநீர் சுத்தப்படுத்தல் தொகுதியை வழங்கியுள்ளது.

அனைவருக்கும் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் என்ற ஐநா நிலைபேற்றியல் அபிவிருத்தி இலக்கு எண் 06 ஐ நிறைவேற்றுவதற்கான அலியான்ஸ் லங்காவின் உறுதிப்பாட்டிற்கு இணங்க இந்த முயற்சி அமைந்துள்ளது.

1,000 க்கும் மேற்பட்ட கிராமப்புற மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலை, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்பாக கடுமையான சவால்களை எதிர்கொண்டது.

ஆரோக்கியமான கற்றல் சூழலுக்கு சுத்தமான குடிநீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த அலியான்ஸ் லங்கா, புதிய, செயல்பாட்டு, உயர்தர குடிநீர் தொகுதியின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பாடசாலை அதிகாரிகளுடன் ஒத்துழைத்து செயற்பட்டுள்ளது.

முழுமையான தொகுதியில் 150 அடி ஆழமுள்ள குழாய்க் கிணறு மற்றும் நீர் சுத்திகரிப்பு தொகுதி ஆகியவை அடங்கும். இது ஒரு நவீன குழாய் தொகுதி மற்றும் மின்சாரத்தால் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சி பூர்த்தி செய்யப்பட்டு 2023 மே 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டது.



# SINOPEC X சீரிஸ் மோட்டார் சைக்கிள் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் அறிமுகம்

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களின் செயல்திறனுக்கு புத்துயிருட்டும் வாக்குறுதியுடன், Interocean Lubricants Pvt Ltd அண்மையில் இலங்கைக்கு புதிய ளுஐஆேீநுஊ மோட்டார் சைக்கிள் உராய்வுநீக்கி எண்ணெய்களை அறிமுகப்படுத்தியது.

SINOPEC இன் இந்த அதிநவீன தொழில்நுட்ப உராய்வுநீக்கி எண்ணெய், இலங்கை முழுவதும் உள்ள மோட்டார் சைக்கிள் ஆர்வலர்களுக்கு சவாரி அனுபவத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

இறுதிநிலை மற்றும் பொதி செய்யப்பட்ட தயாரிப்புகளாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் SINOPEC ஓ சீரிஸ் உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் தரமுயர்ந்த உராய்வு நீக்கி வகைகளாகப் உலகப் புகழ்பெற்றவை.

Interocean Lubricants இன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜெயசாந்த தொட்டஹேவகே அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் "Interocean Lubricants" இலங்கையில் உள்ள துடிப்புமிக்க மோட்டார் சைக்கிள் சமூகத்திற்கு புதிய ளுஐஆேீநுஊ உராய்வுநீக்கி எண்ணெய் வகைகளை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்களுக்கு, அவர்களின் மோட்டார் சைக்கிள்களின் செயல்திறனை அதிகரித்து பாதை முழுவதும் மேம்படுத்திய சக்தியையும், நீடித்த தன்மையையும் வழங்கும். நிகரற்ற உராய்வுநீக்கித் தீர்வுகளை வழங்குவதே எமது நோக்கமாகும் என்றார்.

# விசுவமடுவில் மக்கள் வங்கியின் சேவை மையம்



மக்கள் வங்கி தனது புதிய சேவை மையத்தை விசுவமடு நகரில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

பண மீள்சுழற்சி இயந்திரம் (CRM)) உள்ளிட்ட நவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை இச்சேவை மையம் வழங்குகிறது.

இது வருடத்தில் 365 தினங்களும், நாளில் 24 மணி நேரமும் பணம் மீளப் பெறுதல், வைப்புக்கள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு செலுத்துதல் ஆகியவற்றுக்கு இடமளிக்கின்றது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (மார்க்க முகாமைத்துவம்) ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார, வன்னி பிராந்திய முகாமையாளர் ஏ. ஜயசித், தர்மபுரம் மத்திய கல்லூரியின் அதிபர் திருமதி கந்தசாமி இந்தேகாந்தி, மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவி பிராந்திய முகாமையாளர்கள் எஸ்.பி.சூரியகுமாரன், எஸ்.வி.ஜி.ஜே. செல்லையா, பரந்தன் கிளை முகாமையாளர் எம்.ஏ.பிரான்சிஸ், விசுவமடு சேவை மைய முகாமையாளர் ஜி.ஜெயகணேசன், அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தோட்டத் தொழில் துறைக்கான முதலாவது Global Plantation Summit



முற்போக்கான தோட்ட முகாமைத்துவத்தில் இலங்கையின் முன்னோடிகளான ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ், ஆரம்ப சர்வதேச பேண்தகைமை உச்சி மாநாட்டை ஆரம்பித்துள்ளதாக அறிவித்தது.

எதிர்வரும் காலங்களில் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், தோட்டத் தொழிலை மறுவடிவமைக்கும் ஆற்றலுடன் கூடிய அதிநவீன புத்தாக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் ஆகும்.

புத்திஜீவிகள், அரசு மற்றும் அரசு சாரா அதிகாரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, இந்த மாநாடு 21 ஜூலை 2023 அன்று நடைபெறும்.

இந்த மாநாடு "நிலையான தோட்டங்களை நோக்கி – மறுவடிவமைக்கப்பட்டது ; மறுவடிவமைப்பு செய்யப்பட்டது ; நெகிழ்ச்சியானது" என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது.

ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபுள) நவீன தோட்ட முகாமைத்துவ உத்திகளில் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.